DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

Calender
Miscellaneous **C.C.NO. 104/2020**
Preliminary Register
Sessions
Deposition of witness for Prosecution அ.சா.1
Defence
Court

Name : புவனேஷ்வரி
Father/ Husband Name : கணேசன்
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of **05.07.2022**

**முதல்விசாரணை**

சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டார். நான் நேமத்தான்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். 1 வது எதிரி கணேசன் எனது கணவர். 2 வது எதிரி இராமநாதன் எனது மாமனார், 3 வது எதிரி சிகப்பி எனது மாமியார், 4 வது எதிரி அனிதா எனது நாத்தனார், 5 வது எதிரி நீலவேணி, 1 வது எதிரியின் 2 வது மனைவி, 6 வது எதிரி அஞ்சலை தேவி 5 வது எதிரியின் தாயார் ஆவார்.

நான் தற்போது எனது பெற்றோருடன் தனியாக வசித்து வருகிறேன். எனக்கும், 1 வது எதிரிக்கும் கடந்த 03.11.2006 ம் தேதி குன்றக்குடி சண்முகநாதர் திருக்கோவிலில் வைத்து இருவீட்டார் முன்னிலையில் அவர்கள் சம்மதத்தின்பேரில் திருமணம் நடந்தது. திருமணத்தின்போது எனக்கு 30 பவுன் தங்க நகைகள் எனது பெற்றோர் அணிவித்தார்கள். எனது கணவரான 1 வது எதிரிக்கு 5 பவுன் நகையும் எனது

பெற்றோர்கள் போட்டார்கள்.

மேலும் ரூபாய் இரண்டு இலட்சம் மதிப்புள்ள வெள்ளி மற்றும் சில்வர் பொருட்களும் அடங்கிய சீர்வரிசை சாமான்கள் எனது பெற்றோர்கள் செய்து வைத்தார்கள்.

மேலும் 1 வது எதிரிக்கு ரூபாய் 60 ஆயிரம் மதிப்பிலான ஹீரோ ஹோண்டா இருசக்கர வாகனம் எனது பெற்றோர்கள் வாங்கி கொடுத்தார்கள்.

மேலும் ரூபாய் இரண்டு இலட்சம் செலவில் எங்களது திருமணத்தை நடத்தி வைத்தார்கள், திருமணத்திற்கு பின்னர் நானும், 1,2,3 ஆகிய எதிரிகளுடன் கூட்டுக்குடும்பமாக மாலையிட்டான்வயலில் வசித்து வந்தேன்.

திருமணமான 3 மாதத்தில் 1 வது எதிரி சிங்கப்பூர் சென்றுவிட்டார். எனது கணவர் வெளிநாட்டிற்கு சென்றபின்னர் என்னிடம் கூடுதல் வரதட்சனை கேட்டு 2 முதல் 4 வரையிலான எதிரிகள் கொடுமை செய்தார்கள். நான் எனது கணவருக்கு போன் மூலம் 2 முதல் 4 எதிரிகள் செய்த கொடுமைகளை சொன்னபோது அவர் அதையெல்லாம் பொறுத்துக்கொள் அவங்க அப்படித்தான் பன்னுவாங்க என்று சொன்னார்.

கடந்த 30.08.2007 ம் தேதி ஒரு பெண் குழந்தையும், 12.03.2013 ம் தேதி இன்னொரு பெண் குழந்தையும் எனக்கும், 1 வது எதிரிக்கும் நடந்த திருமணத்தின்பயனாக பிறந்தது.

கடந்த 2013 ம் வருடம் காரைக்குடி மின்வாரிய அலுவலகம் அருகே சொந்தமாக கடை வைக்கவேண்டும் என்பதற்காக எனது நகைகளை 2 முதல் 4 வரையிலான எதிரிகள் கேட்டார்கள். நான் அவர்கள் கேட்டும் கொடுக்காததால் என்னையும், எனது குழந்தைகளையும் வீட்டைவிட்டு விரட்விட்டார்கள்.

நான் இரண்டு குழந்தைகளுடன் எனது அம்மா வீட்டிற்கு வந்துவிட்டேன் அதன்பிறகு எனது கணவர் 2015 ம் வருடம் வரை என்னையும் ,எனது குழந்தைகளையும் பார்க்க வரவில்லை. நான் இரண்டு

குழந்தைகளை வைத்துக்கொண்டு சாப்பாடு உட்பட செலவுகளுக்கு மிகுந்த கஷ்டப்பட்டு மனவேதனையுடன் இருந்து வருகிறேன். காரைக்குடி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் ஜீவனாம்ச வழக்கு தாக்கல் செய்து எனக்கு சாதகமாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

1 வது எதிரி விவாகரத்து வழக்கு எனக்கெதிராக போட்டார். அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. 1 வது எதிரி சித்திவயல் கிராமத்தை சேர்ந்த 6 வது எதிரியின் மகளான 5 வது எதிரியுடன் கள்ள உறவு வைத்து வாழ்ந்து வந்தார், அதன்பிறகு 5 வது எதிரியை திருமணம் செய்து கொண்டார்.

எனக்கும், எனது குழந்தைகளுக்கும் ஜீவனாம்சம் கொடுக்காமல் எனது கணவர் 5 வது எதிரியுடன் வாழ்ந்து வருகிறார். நானும், எனது அம்மா ரெங்கம்மா மற்றும் அப்பா கருப்பையா ஆகியோர்களுடன் எனது கணவர் ஊரான மாலையிட்டான்வயலுக்கு 22.09.2019 ம் தேதி சென்று எனது கணவரை என்னுடன் சேர்ந்து வாழ சொல்லி கேட்டோம். அதற்கு 1 வது எதிரி என்னுடன் சேர்ந்து வாழ முடியாது என்றும் 5 வது எதிரியுடன் தான் வாழ்வேன் என்றும் சொன்னார்.

மேலும் 2 முதல் 4 மற்றும் 6 வது எதிரிகள் ஆகியோர்கள் சேர்ந்து கொண்டு 1 வது எதிரிக்கு 5 வது எதிரியை கடந்த 03.03.2019 ம் தேதி திருமணத்தை எனது கணவரான 1 வது எதிரி வீட்டில் வைத்து நடத்தினார்கள். மேற்படி திருமணத்திற்கு 1 வது எதிரியின் குடும்பத்திற்கு வேண்டப்பட்டவர்களை மட்டும் அழைத்து திருமணம் செய்து கொண்டார்.

1 வது எதிரி தற்போது 5 வது எதிரியை தாலிகட்டி மாலை மாற்றி கணவன் மனைவியாக வாழ்ந்து வருகிறார்கள். சட்டவிரோதமாக திருமணத்தை சில நபர்களுக்கு மட்டும் தகவல் சொல்லி திருமணத்தை நடத்திக்கொண்டார்கள்.

மேற்படி திருமணத்தில் கலந்துகொள்ள சிவகங்கை மாவட்டம் கள்ளமணக்குடி கிராமத்தைச்சேர்ந்த கருப்பையா மகன் பாண்டி

என்பவர் கடந்த 17.10.2019ம் தேதி எனது அப்பா கருப்பையாவிடம் உங்களது மாப்பிள்ளையான கணேசன் 2வதாக நீலவேணி என்பவரை திருமணம் செய்து கொண்டதாக நேரில் பார்த்து சொல்லியுள்ளார்.

அதன்பின்னர் நானும், எனது அப்பாவும் 1வது எதிரி வீட்டிற்கு சென்று 2வதாக திருமணம் செய்தீர்களா என்று கேட்டோம். ஆனால், 1வது எதிரி நான் திருமணம் எதுவும் பன்னவில்லை என்றும் என்னையும், எனது அப்பாவையும் அடித்து விரட்டிவிட்டார்.

மறுபடியும், 18.03.2020ம் தேதி கானாடுகாத்தானைச்சேர்ந்த மதலைகண்ணன் மகன் ராஜேந்திரன் என்பவர் எனது அப்பாவிடம் உங்களது மாப்பிள்ளை 2வதாக திருமணம் செய்த 5வது எதிரி நீலவேணிக்கு கடந்த 05.03.2020ம் தேதி ஆண்குழந்தை காரைக்குடி அரசு தலைமை மருத்துவமனையில் பிறந்தது என்று நேரடியாக சொல்லியுள்ளார்.

அதன்பின்னர் நானும், எனது அப்பாவும் 1வது எதிரி வீட்டிற்கு சென்றோம் அங்கு 5வது எதிரி குழந்தையுடன், 2 முதல் 4 மற்றும் 6வது எதிரி அங்கு இருந்தார்கள். அப்போது எனது கணவர் அங்கு இல்லை. நான் அங்கு அவர்களிடம் கேட்டபோது 5வது எதிரி நான் உன் கணவரை திருமணம் செய்துகொண்டேன் என்றும் மேலும் 2 முதல் 4 மற்றும் 6வது எதிரிகளின் சம்மதத்துடன் திருமணம் செய்து கொண்டேன், உன்னால் முடிந்ததை பார்த்துக்கொள் என்று சொன்னார்.

2 முதல் 6 வரையிலான எதிரிகள் அனைவரும் 1வது எதிரிக்கு 5வது எதிரிதான் மனைவி என்றும் உனக்கு இங்கு இடம் இல்லை என்றும் சொல்லி மேலும் பிரச்சனை செய்யாமல் போய்விடு என்று கதவை அடைத்தார்கள். நான் உடனே தேவகோட்டை அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தேன். ஆனால், காவல் நிலையத்தில் 2வது திருமணத்திற்கு வழக்கு போடமுடியாது என்றும் நீதிமன்றத்திற்கு போய் பார்த்துக்கொள் என்றும் சொல்லிவிட்டார்கள்.

எனக்கும், எனது கணவருக்கும் இடையேயான

திருமணம் நிலுவையில் இருந்து வருகிறது, 1வது எதிரி தாக்கல் செய்த விவாகரத்து வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. எனது கணவரான 1வது எதிரி 2வதாக திருமணம் செய்து அதன்மூலம் குழந்தை பெற்று திருமணத்தை முறையாக செய்யாத சட்டப்படி நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன்.

**(எனக்கும், 1வது எதிரிக்கும் நடந்த திருமணத்தின்போது எடுக்கப்பட்ட புகைப்படம் அ.த.சா.ஆ.1)**

**(எனக்கும், 1வது எதிரிக்கும் நடந்த திருமணத்திற்கான திருமண அழைப்பிதழ் அ.த.சா.ஆ.2)**

**(மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க ஆவணங்களை குறியீடு செய்வதற்காக முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது).**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை